1996 ஆகஸ்ட் 6]

அடுத்து, வினா எண் 105, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் நாசர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

105--

மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

*1112--**திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிதம்பரம் தாலுக்கா, பறங்கிப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரம் தாலுக்கா, பறங்கிப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்து, பெங்களூரிலுள்ள மத்திய கடலோரப் பொறியியல் நிறுவனம் தொழில் நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ள மைய அரசுக்குப் பெருந்திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளது. ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் பறங்கிப்பேட்டையில் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டபின் திட்டத்தைச் செயலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. அ.வ. அப்துல் நாசர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய வெள்ளாற்று முகத்துவாரம் தூர்ந்து போய் இருக்கிற காரணத்தால், தற்காலிகமாகவாவது அங்கே தூர் வாரும் கப்பலை வைத்து, மேடிட்ட மண் பகுதிகளை அகற்றி, அந்தப் பகுதி மீன்பிடி மக்களுக்குப் பயன்தரும் வகையில், அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை. தமிழரசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

தமிழ்நாட்டிலுள்ள சட்டக் கல்லூரிகள்

*2796--**திரு. குழந்தை. தமிழரசன் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சட்டக் கல்லூரிகள் உள்ளன?

(ஆ) அவைகளில் உள்ள பி.எல்., மற்றும் எம்.எல்., வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் இப்போது 4 அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஒன்று சென்னையில், மற்றொன்று மதுரையில், பிறிதொன்று திருச்சியில், இன்னொன்று, கோவையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருநெல்வேலியில், ஒரு சட்டக் கல்லூரியை இவ்வாண்டு துவக்க அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோக சேலத்தில் தனியார் ஒருவருடைய சட்டக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) பி.எல்., மற்றும் எம்.எல். வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்: